## தைத்திருநாள்

*தமிழை, தமிழுணர்வை, மாண்பை, மனதை, கால்நடையை, கரும்பை,
பெரியோர் அன்பை.... ஒருங்கே இணைத்து "தைத்த திருநாள்"
இயற்கை போற்ற "வைத்த திருநாள்".--இந்த தைத்திருநாள்
பழையன கழித்தல்
புதியன ஏற்று பகலவன் தொழுதல்
மாடெனும் செல்வத்தை மக்களும் மதித்தல்
பெரியோர் வணங்கி பேரன்பு வளர்த்தல்
வருடத்தின் வாசலில் நான்கு நாட்கள்*

*தாழ்வாரத்தில் அடுப்புக்கூட்டி,
காய்கறி பழங்கள் கரும்பு ... சூழ
வண்ணக்கோலமிட்டு, வாயெல்லாம் புன்னகைத்து
இருபானைக்கும் மஞ்சள் இஞ்சி ஆடை கட்டி
நற் கதிரவன் கண்விழிக்கும் வேளையில்
நெற் கதிர் தந்தமைக்கு நன்றி சொல்லி,
புத்தாடை, புத்தரிசி... பொங்கலோபொங்கல்
குலவையெல்லாம் ...
பழங்கனவாய்... பகல் நிலவாய் ...
குக்கருக்கு குங்குமம் வைத்து
விசிலையே குலவையாக்கி,
மெகா மார்ட் பச்சரிசி பாலில் கொதிக்க
சர்க்கரைப்பொங்கல் சட்டென தயாராகி...*

***சகலமும் தொலைத்த பின்னே...
தோட்டத்து பசுமையெல்லாம்
தொட்டியில் தான் தேடுகின்றோம்***
*பொங்கல் விருந்து வைத்து விளம்பிய பின்னர்,
கூட்டிக் கழித்து, பெருக்கி வகுத்துப் பார்க்க
விடுமுறை மட்டும் தான் மீதம்...
"வியர்வைக்கு விடுமுறை" நான் கொண்ட போதம்.
வியர்வை என்பது உடல் உகுக்கும் ஆனந்தக் கண்ணீர்.
உழைப்பவன் உடலின் ஒவ்வொரு செல்லிலும் மலரும் பூ.
களைப்பின் புன்னகை..கண்சிமிட்டும் உழைப்பு...
அதுவே இந்தக் கவிதையின் தலைப்பு.*

*விடுமுறை என்பது நமக்கான தருணம்
மாதங்களில் அழகு மார்கழி. மார்கழியின் வியர்வை குளிர்பனி.
அந்தக் குளிர்பனி விடுமுறை பெறும் தைமாதத்தில்
அதை வழியனுப்பும் மார்கழி வாசல் விழாக் கோலத்தில்.
ஆண்டெல்லாம் நிலத்தில் உழைக்கும் காளைக்கும்,
களத்தில் களைப்பெய்தும் விவசாயியின் வேலைக்கும்... என்ற காரணம் சொல்லி,
வாகன நெரிசலற்ற சாலைக்கும்,
பசுவுக்கும், கன்றுக்கும்...பள்ளிக்கும், கல்லூரிக்கும்...
இயற்கை விளைவித்த அனைத்துக்கும்,
அத்தனைக்கும் விலைவைத்த அரசுக்கும்,
ஆள்வோர்க்கும், அலுவலுக்கும், நாலு நாட்கள்...
"அப்பப்பா" களைப்பை நீக்க, வியர்வை போக்க, விடுமுறை.*



*சசி குமார் கடலூரில் வளர்ந்த நெல்லைக்காரர். இருபதாண்டுகளுக்கும் மேலாக அமீரகத்தில் வசிக்கிறார். அருமை மனைவி மீனா, அருந்தவப்புதல்வன் அரவிந்த் பாரதியுடன் பொன்மாலைப் பொழுது மற்றும் தோக்கியோ தமிழ்ச் சங்கத்தின் இலக்கியத் தூணாக விளங்குபவர்.. **மெல்லச்சிறகசைத்து.. (பயண நூல்), எழினி (குறுநாடகத் தொகுப்பு)** என்கிற இரு நூல்களின் ஆசிரியர். துபாய் மின்சாரம் மற்றும் நீர் ஆணையத்தில் (DEWA), முதுநிலைப் பொறியாளராக, திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு பணி.*

# நான்குநாள் விடுமுறையும்

சசி S குமார்

சாய்வு நாற்காலியில், ஓய்வாய் அமர்ந்து...
உலகத்தொலைக்காட்சிகளில் முதல் முறையை...
நூறாம் முறையாய்க் காண நீள் விடுமுறை.
அமேஸான், நெட்ஃப்ளிக்ஸ் கடந்து அரங்கம் காணும் விடுமுறை.
அரங்கங்கள் யாவிலும் நூறு? ஐம்பது? விழுக்காடு...
அத்தியாவஸ்யம் யாவையும் இன்னும் வழக்கோடு...
அதற்கென்ன? அனைத்தும் மறந்து இணைந்து உறவாடு...
நாளெல்லாம் இருளரங்க ஒளியில் நீ நாட்டுக்கொரு தலைமைத்தேடு...
நட்சத்திரங்கள் நலிந்து, தள்ளாமையால் விடுமுறை கேட்டால்,
தமிழா ...நீ தளர்ந்து வாடு...

"வியர்வைக்கு விடுமுறை" என்னும் விதிமுறை...
வீதி தோறும் விலக்குப் பெறுகிறது
பேராயங்கள் கூடி விற்கும் சாராயச் சந்தைகளில்,
விடுமுறைக்கே விடுமுறை. சரித்திர விற்பனை சாதனைகள்
நாளேடுகளில்... விடுமுறை நாள் விற்பனை அமோகம்.
-தலைப்புச் செய்தியாக-

அத்தனைக்கும் அனைத்துக்கும் விடுமுறை...
இல்லத்தின் உள்ளே இல்லாத விடுமுறை...
வாசற்கோலமும், கரும்புக்கட்டும், மஞ்சள் கொத்தும்,
பொங்கற் பானையும், காய்கறிக் குவியலும், சர்க்கரைப் பொங்கலும்,
பிள்ளைகள் சலசலப்பும், கணவனின் அழைப்பொலியும்...
அத்தனைக்கு இடையினிலும் மாறாத புன்னகையும்,
கூந்தலில் ஆடுகின்ற மல்லிகையும்,
பருத்திப் புடவை கட்டி, பளப்பளக்கும் உன்முகத்தில் "அம்மம்மா"
மின்னுகின்ற வியர்வைக்கு ஏதம்மா விடுமுறை?

விடுமுறை என்பது...
விடியல் -நிலவின் விடுமுறை
அந்தி -ஆதவனின் விடுமுறை
முகிழ்ச்சி - விதைக்கு விடுமுறை
நெகிழ்ச்சி- கண்டிப்பிற்கு விடுமுறை
மகிழ்ச்சி- கவலைக்கு விடுமுறை
மௌனம்- வார்த்தைக்கு விடுமுறை
கண்ணீர்- வாய்ச்சிரிப்புக்கு விடுமுறை
கலைகள்- காழ்ப்புக்கு விடுமுறை
சிலைகள்- கல்லுக்கு விடுமுறை
நெருப்பு- ஈரத்தின் விடுமுறை
பிறப்பு -தாய் வயிற்றுக்கு விடுமுறை
இறப்பு - தனது வாழ்க்கைக்கே விடுமுறை

பொங்கலோ, திங்களோ,
பூமியின் சுழற்சிக்கும், பூக்களின் மலர்ச்சிக்கும்,
சுவாசத்துக்கும்,நேசத்துக்கும்,
காற்றுக்கும், கடலலைக்கும், கற்பதற்கும்,கவிதைக்கும்
வாய்மைக்கும்,தாய்மைக்கும் ...
விடுமுறை ஏதும் உண்டா?
விடை ஏது கூறு நண்பா!

# அடுக்ககத்தின் முன்றிலும், அதில் அமரும் அன்றிலும்...

சசி S குமார்

“கட்டைச் கைச்சுவர் சாய்ந்து நிற்கலாம்,
வீதி சுவாரஸ்யம் விழியெறிந்து பற்றலாம்,
தொட்டிச் செடிகள் நனைய நீரூற்றி,
பூக்கள் எண்ணி புன்னகை சிந்தலாம்...
மெல்ல அருகமரும் புறாச் சிறகின்
மென்மை உணர அனுமதி முயலலாம்...
தென்றல்,தேநீர் இரண்டும் சுகித்து
மாலைநேரப் பண்பலை ரசிக்கலாம்...
சாய்வு நாற்காலி சவுகரியம் சேர்க்க,
உறவு, நட்பிடம், நடப்பைப் பேசலாம்...
வீதியில் சிந்தும் சித்திரை வெய்யிலையும்,
விடியலில் குளிரும் மார்கழிப் பனியையும்
கொஞ்சம்,கொஞ்சி,வீட்டினுள் அழைக்கலாம்,
இரவுநேர வானின் இருளை,
நமக்கே நமக்கென உரிமை கொள்ளலாம்.
நகரும் நிலவில் மேனி நனைத்து
காதல் பேசி... கண்கள் துவளலாம்...
கோரைப்பாய்த் தடம் முதுகில் பதிய
நன்கு உறங்கி, நள்ளிரவு விழிக்கலாம்....”
------ என பழகுதமிழ் வழக்கிலிருக்கும்
பால்கனி என்ற முன்றில் குறித்த கனவுகள்.

வீடுபேறு அடைந்தும்,
பால்கனிப்பேறு பல்லாண்டுகள் இல்லை
துணையின்,மகனின், மனத்தின் கனவு,
அடுக்கக மூன்றாம்தளம்... முன்றில் வாய்த்து,
மூன்று மாதங்கள் இன்றோடு.
ப்ளாஸ்டிக் பைகள், பழைய காலணி,
உடைந்து போன உடற்பயில் இயந்திரம்,
ஆணி,கயிறு, அட்டைபெட்டிகள்....
ஆடை உலர்த்தும் சட்டகம் என,
அழுக்கு, அடைசல் பால்கனி நிறைய...
இறகு, கழிவு, எச்சம் தவிர்க்க
பறவை வரவைத் தடுக்க...
கவனம் மிகவே, கம்பி வலை.
பழங்கனவின் குப்பைகளுடன்
பறவைகளற்ற பால்கனி இன்று...
அழுக்கில்,தூசியில், நின்றவாறே
அழகுப் பறவைகளின் வண்ணம் ரசிக்க,
தூரச் சிறகசைப்பில் மனசு மகிழ்த்த
தொலை குரல் ஒலியில் அன்பை உணர
பழக்கிக் கொண்டோம்... அது சரி.
உறவுகளும், பறவைகளும்...வேறா என்ன?



மேலே உள்ள கவிதையையே தூண்டி(Prompt) யாக உள்ளிட்டு chatGPTயில் உருவாக்கிய ஓவியம்

ஓவியம்: ChatGPT